1978 மார்ச் 8]

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : சாதாரணமாக எங்கள் பகுதியில் தீ பிடித்துக்கொண்டால் அதை பொதுமக்கள் அணைத்த பிறகுதான் தீயணைப்புப் படை வருவது வழக்கம். ஆகவே மிக முக்கியமான தாலுக்கா தலைநகராக பாபநாசம் இருப்பதால் அங்கே ஒரு தீயணைப்புப் படை அமைப்பதற்கு இந்த அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அரசினர் தமது 19-3-73 ஆம் தேதிய உள்துறை ஆணை 762இல் ஓர் முதன்மைப் பட்டியலை அங்கீகரித்துள்ளனர். இம்முதன்மை பட்டியலானது நகரின் மக்கள் தொகை, தீ அபாயம் உள்ள இடங்கள், அருகாமையிலுள்ள தீ அணைப்பு நிலையத்தின் தொலைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள 59 நகரங்களில் 29 நகரங்களில் ஏற்கெனவே தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 30 நகரங்களோடு மேலும் 22 நகரங்களின் பெயர்களையும் சேர்த்து 52 நகரங்கள் கொண்ட ஒரு புதிய பட்டியலை தயாரித்து அரசினரது ஒப்புதலுக்கு தீயணைப்புத் துறை இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நகரங்கள் தவிர எஞ்சியுள்ள நகரங்களின் பட்டியல் இருப்பதாகத் தெரிவித்தார்கள், அதில் எந்தெந்த ஊர்கள் அடங்கியிருக்கின்றன ? குறிப்பாக, சீர்காழியில் தீயணைப்பு நிலையம் உருவாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அந்தப் பட்டியல் என்னிடம் இல்லை. இப்போது. இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்கிறேன். சீர்காழி 19ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதன் முறை வரும்போது ஒரு தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

புயலால் பாதிக்கப்பட்டவர்கள்:

* வினு 441—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா; 12-11-1977ல் வீசிய கடும் புயல் காரணமாக மரணமடைந்தோர் குடும்பத்திற்கு அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 1000 என்பதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை.

[1978 மார்ச் 8

திரு. மு. அம்பிகாபதி : மோட்டார் விபத்தில் இறக்கிற அனைவருக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. புயல், வெள்ளத்தால் இறந்த அனைவருக்கும் 'தலா ஆயிரம் ரூபாய் என்று அவர்கள் வருமானம் வருகிறவர்களா சம்பாதிக்கிறார்களா என்று பார்க்காமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா? எவ்வளவு பேர்கள் இறந்தார்கள் என்ற தகவலை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போதைய முறைப் படி தீ, வெள்ளம் இவைகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள் குடும்பத்தின் தலைவராகவும் பொருளீட்டுபவராகவும், மிகவும் ஏழ்மை நிலையிலும் இருந்திருந்தாலோ அல்லது நிரந்தரமான உடல் ஊனமுற்று வேலை செய்ய இயலாத நிலையை அடைந் தாலும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து அளிக்கலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் விபத்து நடந்த 15 நாட்களுக்குள் நிதி உதவி அளிப்பதற்கான செயற் குறிப்பினை அரசுக்கு அனுப்பும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்கள் குடும்பத்தின் பொருளீட்டுப வர்களாக இருந்தால் அக் குடும்பத்திற்கு ரூ. 1,000 மட்டும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம் என்று நிதித் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

ஆனால் திரு. அம்பிகாபதி கேட்ட கேள்வி எல்லோருக்கும் வழங்கப்படுமா என்பதாகும். அது இப்போது சாத்தியமில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இந்த வெள்ளத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை என் னுடைய தொகுதியில் மட்டும் 30 என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த எண்ணிக்கையில் தொகை கிடைத்திருப்பது 5 பேர்களுக்கு மட்டும் தான். பொருள் ஈட்டுபவர்கள், குடும்பத்தின் தலைவன் என்கின்ற முறைகளை எல் லாம் மாற்றி பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள் என் பதை கருத்திற்கொண்டு, எல்லோருக்கும் இந்த உதவி கிடைக்கக் கூடிய வழியில், ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்காவது இந்த தொகை கிடைக்கின்ற அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்படும் என்பதைப்பற்றி குறிப்பிட்டுவிட்டேன். அதையொட்டி திரு.அம்பி காபதி அவர்கள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லி விட்டேன்,

1978 மார்ச், 8]

மற்றபடி இப்போது இருக்கின்ற முறைகளை மாற்றுகின்ற உத்தேசம் தற்போது அரசிடம் எதுவும் இல்லை. தேவைப்பட்டால் அது பற்றி பரிசீலிக்கப்படும். 30 பேர்கள் இறந்து போனார்கள் என்றும், ஐந்து பேர்களுக்குத்தான் இந்தத் தொகை கொடுக்கப்பட்டது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்திருக்கிறார்கள். அதைத் தெரிந்து கொண்டு, இதில் உண்மை என்ன என்று கண்டுபிடித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி: இந்தப் புயலால் பாதிக்கப்பட்டவர்களைப்பற்றிச் சரியான கணக்கு எடுக்கப்படவில்லை. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அப்போது வெளியூரில்—பொது நிறுவனங்கள் குழு சுற்றுப்பயணத்தில் இருந்தோம். எங்கள் பகுதியில் இரண்டு பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டார்கள். இதற்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்க அதிகாரிகளிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்கத்தினிடமிருந்தோ அதிகாரிகளிடமிருந்தோ இதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஆகவே, இதைப்பற்றி விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அது பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, புயல் வீசுகின்ற நேரத்தில், சம்பாதிக்கின்றவர்களா இல்லையா என்று பார்த்து வீசுவதில்லை. புயலால் இறந்தவர்களும், அவர்களுடைய தவறால் இறந்துவிட வில்லை. ஆகவே, இறந்தவர்கள் அனைவருக்கும் இந்த உதவி கிடைக்க ஆவன செய்யப்படுமா? மேலும் இப்படி இறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்கள், இதில் எத்தனை பேர்களுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது என்கின்ற விவரத்தை அரசு தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்கள் தெரிவித்தது ஒரு புதிய தத்துவம் என்று நான் கருதவில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். புயல் வீசும்போது யார் என்று பார்த்து வீசுவதில்லை. அப்படி புயலுக்கு வீசத் தெரியாது. இரண்டாவது எத்தனை பேர்கள் மாண்டு போனார்கள் என்கின்ற செய்திக்கும் இதில் எத்தனை பேர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்கின்ற செய்திக்கும் என்னிடம் இப்போது விவரம் இல்லை. தனியாக இதற்குக் கேள்வி போட வேண்டும்.